(இ) மனுச் செய்துகொண்ட எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி.க்களில் யார்யாருக்குக் கொடுக்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பேரவைமுன் விவரப் பட்டியில்a ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : இந்த அறிக்கையின்படி 56 பேர்களுக்கு கார் வழங்கப்பட்டிருக்கிறது. 41 பேர்களுக்கு வழங்கப்படவில்லை. வழங்கப்படாதவர்களில் நானும் ஒருவன். 56 பேர்களில் 19 பேர்களுக்கு எனக்குத் தெரிந்தவரையில் எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனக்குப் கார் கொடுக்கவேண்டுமென்று, உத்தரவு இடுமாறு கேட்ட சமயத்தில் எனக்குக் கொடுக்காமல் ப. உ. ஷண்முகம், அன்பழகன், ஆகியோருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி அவர்களுக்குக் கொடுத்தார்கள். ஏற்றுக்கொண்டேன். இப்போது, ஆளும் கட்சியாக வந்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சியினருக்கு நாங்கள் காட்டிய அந்தச் சலுகையை நீங்கள் காட்டுவீர்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இன்னும் அவர் கேட்கவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். கேட்டால் கொடுக்கப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : ஒரவஞ்சனையில்லாமல் கார் வேண்டுமென்று கேட்கிற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு, யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலைப்படாமல் தரப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தரப்படும். ஆனால் அவர் அதை வாங்கிவிடவேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : அவரவர்களுடைய தொகுதியை உறுப்பினர்கள் சுற்றிப்பார்க்கவேண்டுமென்ற அடிப்படையில், அவர்களுக்குக் கார் வேண்டுமென்று தரப்படுகிறது. அதில் வசதி உள்ளவர்களும் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். அதையொட்டிச் சட்டசபை அங்கத்தினர்களுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பதைப் போல் கடன் தொகை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படிக் கொடுப்பது கடன் அல்ல. சர்க்காரின் கடன் அல்ல. அதாவது கடமை அல்ல.

Motor, Lorry and Scooter Accidents.

187 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Works be pleased to state :—

(*a*) the number of (1) motor, (2) lorry, and (3) scooter accidents which took place in the Madras State from 6th March 1967 to 1st June 1967 ;

(*b*) the number of fatal cases among them, category-wise ; and

(*c*) whether any compensation was paid to the families of the deceased ?

---

a Printed as Appendix on pages 418-420

6th March 1968]

மோட்டார், லாரி, ஸ்கூட்டர் விபத்துக்கள்.

***திரு. என்: ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் : —

(அ) 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் தேதி முதல் ஜூன் மாதம் 1-ம் தேதி வரை தமிழகத்தில் நிகழ்ந்த (1) மோட்டார் வண்டி (2) லாரி (3) ஸ்கூட்டர் விபத்துக்கள் எத்தனை ?

(இ) அவற்றில் மரண விபத்துக்கள் தனித்தனியே எத்தனை ?

(உ) இவ்விபத்தால் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தமிழ்நாட்டில் 6—3—1967 முதல் 1—6—1967 வரையிலுள்ள காலப்பகுதியில் கீழ்க்கண்டவை குறித்து ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை வருமாறு :—

	1. பேருந்துகள்	469
	2. சரக்கு பேருந்து	628
	3. ஸ்கூட்டர்கள்	93
(இ)	பேருந்து விபத்திஞல் மரணமடைந்தவர்கள்.	126
	சரக்கு பேருந்துகள் விபத்திஞல் மரணமடைந்தவர்கள்.	140
	ஸ்கூட்டர் விபத்திஞல் மரணமடைந்தவர்கள்	7

(உ) மோட்டார் வண்டி விபத்துக்கள் கோரிக்கை நடுவர் மன்றம் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு அளிக்கிறது. காப்புறுதிக் கம்பெனிகளும் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நேரடியாக இழப்பீடு அளிக்கிறது. வழங்கப்பட்ட தொகைகள் குறித்து அரசாங்கத்திடம் இப்போது விவரம் எதும் இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஸ்கூட்டர்களில் செல்பவர்களுக்குத் தொப்பி அணிய வேண்டுமென்று சொல்லப்பட்டது. அது என்னவானது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி அது இன்னும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி பொது மக்களின் அபிப்பிராயம் கோரப்பட்டு, அதை அரசாங்கம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, 6-3-67-லிருந்து 1-6-67 வரை விபத்திற்குள்ளான சர்க்கார் பஸ்கள் எத்தனை ? அதே சமயத்தில் பழைய சர்க்கார் இருந்தபோது எத்தனை விபத்துக்கள் ஏற்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : விபத்துக்களுக்கும், அவ்வப்போது இருக்கிற சர்க்காருக்கும் சம்பந்தமில்லை. என்றாலும் இருக்கின்ற பட்டியல் படி 6-3-67-லிருந்து 1-6-67 வரை தமிழ்நாடு அரசாங்கப் போக்கு வரத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் 184. அதே போல 6-3-66-லிருந்து 1-6-66 வரை ஏற்பட்ட விபத்துக்கள் 228.

திரு எம். எத்திராஜுலு இப்போது பெருவாரியாக தமிழகத்தில் லாரியினால்தான் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஒரு தடவை விபத்திற்கான லாரியே மறுபடியும், இரண்டாவது தடவையும், மூன்றாவது தடவையும் விபத்துக்குள்ளாவது சர்வ சாதாரணமாகிவிட்டது. அதைத் தடுக்க, ஒரு தடவை விபத்திற்குள்ளானல், அந்த வண்டி மறுபடியும் விபத்திற்கு ஆளாகுமானல், அந்த லாரியை இரண்டு வருட காலத்திற்கு ஓடாமல் அந்தப் பர்மிட்டை சஸ்பெண்ட் செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : லாரி உரிமையாளர்களுக்கும், விபத்துக்களுக்கும் சம்பந்தமில்லை. அது லாரிகளை ஓட்டுகிற ஓட்டுனர்கள், அதாவது டிரைவர்களைப் பொறுத்த விஷயம்.

திரு கே. ராமதாஸ்: குறிப்பாக லாரி விபத்துக்கள்தான் அதிகமாக இருக்கின்றன. நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட சமீபத்தில் ஒரு விபத்திற்கு ஆளாகியிருக்கிறார். டிரைவர்கள் உபயோகிக்கும் **accelerator** கள் நல்ல " கண்டிஷனில் " டி.வி.எஸ். வண்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்ற நிலைமை எல்லா லாரிகளுக்கும் இருந்தால் சுலபமாக இருக்கும். விபத்துக்களும் குறையும். ஆகவே, அதற்கான திட்டம் எற்படுத்த சர்க்கார் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : டி.வி.எஸ். பஸ்ஸிற்கு வைத்து இருப்பதை, அதாவது சட்டத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை மீறி கார் ஓட்டினால் அதைச் காட்டிக் கொடுப்பதற்கான கருவி பொருத்தப்பட்டு இருப்பதைப் போல நம்முடைய அரசாங்கப் போக்கு வரத்து பஸ்களில் வைக்க யோசித்துக்கொண்டிருக்கிறோம். மற்ற லாரிகளுக்கும் வைக்க வேண்டுமானால் உத்தரவாகத்தான் போட வேண்டும்.

திரு. சி. வி. ராசகோபால் : இந்த ஸ்கூட்டர்களில் குடும்பத்தோடு செல்கிறார்கள். மனைவியையும், குழந்தைகளையும்குட்டிகளையும் அழைத்துக் கொண்டு போகிறார்கள். அதனால் விபத்திற்கு ஆளாகும்போது எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, குழந்தைகளையும், குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டியாவது, ஸ்கூட்டர்களில் அவர்கள் மட்டும்தான் செல்ல வேண்டும், குடும்பத்தை அழைத்துச் செல்லக் கூடாது என்று சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பாதுகாப்பிற்காகத் தொப்பி போட வேண்டுமென்று சொல்லும்போதே எதிர்ப்பு வரும்போது, இதைக் கட்டுப் படுத்த முடியுமா என்பது பற்றி யோசிக்க வேண்டும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Will the Government see that all the lorry drivers are changed every six hours and alternative drivers provided ? I believe that statue provides for it, and I do not know whether this is carried out actually.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஷிப்ட் முறையில் டிரைவர்கள் வைத்திருந்தால், களைப்பில்லாமல் ஓட்ட முடியும். உரிமையாளர்கள் பாதுகாப்பாக இருந்து கவனிப்பு கொடுத்து வந்தால், நாட்டின் நலன் கருதி விபத்துக்களைத் தடுக்க முடியும்.

Palayamkottai Tourist Bungalow

188. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state :

(*a*) whether the rent for the tourist bungalow in Palayamkottai, Tirunelveli district was reduced recently ; and

(*b*) if so, whether there is any proposal to reduce the rent for tourist bungalows in other places likewise ?

பாளையங்கோட்டை சுற்றுலாப் பெருமாளிகை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) திருநெல்வேலி மாவட்ட பாளையங்கோட்டை சுற்றுலாப் பெருமாளிகையின் வாடகை அண்மையில் குறைக்கப்பட்டதா ?